(3)

# பொருளியல்
# ECONOMICS

## வெளிவாரி விளைவுகள்
## EXTERNALITIES

அலகு - 2.10

வே. கருணாகரன்
B. A. Hons, Dip. in Ed.


1999

0
ணா

# பொருளியல்
# ECONOMICS

# வெளிவாரி விளைவுகள்
# EXTERNALITIES

## அலகு—2.10





வே. கருணாகரன் B.A.Hons Dip. in Ed
(யாழ் கனகரத்தினம் ம.ம.வி)



1999



126908

Subject: Economics
Title: Externalities
Author: Velautham Karunaharan
Address: 215K, Navalar Road,
Jaffna.
Language: Tamil
Pages: 46
First Edition: April 1999
Copy Right: Mrs. Sayanthi Karunaharan.
Printer: GANGAI
Computer Print & Roneo
Navalar Road
(Near brown Road)
Jaffna.

Price: Rs. – 50/=



# முன்னுரை

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் வணிக வியலாளன் சஞ்சிகைக்காக 1996 இல் இக்கட்டுரை எழுதப்பட்டது. 1997 G. C. E A / L பரீட்சையில் 15 புள்ளிகளைக் கொண்டதாக வெளிவாரி விளைவுகள் பற்றி வினாவப்பட்டது. இக்கட்டுரை தமக்கு விடை எழுத உதவியதாக பல மாணவர்கள் குறிப் பிட்டிருந்தனர். 1998 பரீட்சையிலும் வெளிவாரி விளைவுகள் பற்றி வினாவப்பட்டது. எனவே இப்பகுதி முக்கியமான ஒன்றாகும் என்பது புலனாகிறது.

இதனைக் கற்றதன் பின் இறுதியிலுள்ள வினாக் களுக்கு விடை எழுதப் பயிற்சி பெறவும். முக்கிய மானவற்றிற்கு விடைகள் இறுதியில் வழங்கப் பட்டுள்ளன. ஏனையவற்றிற்கு கட்டுரையிலிருந்து நேரடியாக மாணவர்கள் பெற முடியும்.

இந்நூல் வெளிவருவதற்கு அருள்பாலித்த இறைவனை மனதிலிருத்தி, இதற்கு உதவிய சகலருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்ததுக் கொள்கின்றேன்.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| I. | வரைவிலக்கணம் | 06 |
| II. | வகைகள் / மூலகங்கள் | 06 |
| III | வெளிவாரி விளைவுகளும், வெளிவாரிச் சிக்கனங்கள்/ சிக்கனமின்மைகளும் | 16 |
| IV | தனிப்பட்ட, சமூக செலவு / நன்மை என்பவற்றிடையிலான வேறுபாடு | 17 |
| V | வெளிவாரி விளைவுகளுடாகச் சந்தைத்தோல்வி | 21 |
| VI | சீர்செய்ய அரசின் நடவடிக்கைகள் | 27 |
| ❖ | கடந்த காலப்பரீட்சை வினாக்கள் | 32 |
| ❖ | பயிற்சி வினாக்கள் | 34 |
| ❖ | விடைகள் | 45 |




# அறிமுகம்

1992 இல் சோவியத் ஒன்றியத்தின் உடைவினைத் தொடர்ந்து சோசலிச முறைமையைப் பின்பற்றிய நாடுகள் பலவும் சந்தை முறைக்கு மாறும் பல்வேறு கட்டங்களில் உள்ளன. அதே நேரம் சந்தைப்பொருளாதாரத்தைப் பின்பற்றி புதிதாகக் கைத்தொழில்மயமாகிய நாடுகளது (NIC) துரித அபிவிருத்திப் போக்கும் இலங்கை உட்பட உலகின் பல நாடுகளையும் சந்தைத் தோழமையான கொள்கைகளைப் (Market Friendly Policies) பின்பற்றத் தூண்டியுள்ளன இவ்வகையில் மலரப்போகும் 21ம் நூற்றாண்டில் சந்தைப் பொருளாதாரம் மேலும் முக்கியத்துவம் பெறும் எனலாம். இத்தகைய சந்தைப் பொருளாதாரத்தில் காணப்படும் முக்கிய குறைபாடாகவும், அதன் தோல்விக்கு வழிவகுக்கின்ற வெளிவாரி விளைவுகள் பற்றி அறிந்து கொள்வது அவசியமாகின்றது. அத்தோடு க.பொ.த. உ.தரப் பரீட்சையில் 1997ல் இருந்து நடைமுறைப் படுத்தப்படுகின்ற புதிய பாடத்திட்டத்தில் ஒரு உபபிரிவாக வெளிவாரி விளைவுகள் உள்ளமையால் அந்த மாணவர்களுக்கு இவ்விடயம் பற்றி அறிந்து கொள்வது மிகவும் அவசிய மாகின்றது. இந்நூலில் வெளிவாரிவிளைவுகள் பற்றி

I வரைவிலக்கணம்

II வகைகள்/மூலகங்கள்

III வெளிவாரி விளைவுகளும் வெளிவாரிச் சிக்கனங்கள்/ சிக்கமின்மைகளும்.

IV தனிப்பட்ட சமூக செலவு / நன்மை என்பவற்றிடையிலான வேறுபாடுகள்

வெளிவாரி விளைவுகளுடாகச் சந்தைத் தோல்வி வெளிவாரி விளைவுகளை சீர்செய்ய அரசாங்கம் மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் என ஆறு பகுதிகளாக ஆராயப்படுகின்றது.

## வரைவிலக்கணம்

இங்கு "வெளிவாரி (External)" என்பது "சந்தை/ விலைப் பொறி முறையின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது / வெளியேயானது" என்பதனையே குறிக்கின்றது.

"தனிநபர் / நிறுவனம் ஒன்றின் பொருளாதார நடவடிக்கையின் (உற்பத்தி / நுகர்வு) காரணமாக அதனுடன் நேரடியாகத் தொடர்புபடாத பிறருக்கு நன்மை/ தீமை (செலவு) ஏற்படுகின்றபோதும், அதன் பொருட்டு யாதேனுமொரு கொடுப்பனவோ / நட்டஈடோ வழங்கப்பட வில்லையாயின் அத்தகைய நன்மை/தீமைகள் வெளிவாரி விளைவுகளாகும்."

இவை உற்பத்தி / நுகர்வின் போது பொங்கி எழும் விளைவுகள்( Spill – Over effects) / அயல் விளைவுகள் (Neigbour hood effects) / மூன்றாந்தரப்பு விளைவுகள் (Third Party effects) ஆகும்.

## வெளிவாரி விளைவின் வகைகள்: மூலகங்கள

வெளிவாரி விளைவுகள் இருவழிகளில் வகைப்படுத்தப் படுகின்றன.

1. விளைவின் தன்மையின் அடிப்படையில் வகைப் படுத்தல்.



A. வெளிவாரி நன்மைகள் / நேர்க்கணிய வெளிவாரி விளைவுகள்

B வெளிவாரி செலவுகள் / எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகள்

2. **பொருளாதார நடவடிக்கையின் அடிப்படையில் வகைப் படுத்தல்**

அ) உற்பத்தியில் வெளிவாரி விளைவுகள்

ஆ) நுகர்வில் வெளிவாரி விளைவுகள்

இ) கலப்பு வெளிவாரி விளைவுகள்

## 1.A வெளிவாரி நன்மைகள்/ நேர்க்கணிய வெளி வாரி விளைவுகள (External Benefits /Positive Externalities)

"தனிநபர்/நிறுவனம் ஒன்றின் பொருளாதார நடவடிக்கையின் (உற்பத்தி / நுகர்வு) காரணமாக அதனுடன் நேரடியாகத் தொடர்புபடாத பிறருக்கு நன்மை ஏற்படுகின்றபோதும். அதன் பொருட்டு யாதேனுமொரு கொடுப்பனவு வழங்கப்படவில்லையாயின் அத்தகைய நன்மைகளே வெளிவாரி நன்மைகளாகும்"

(உ-ம்) 1) குறிப்பிட்ட ஒரு தொழிற்சாலை தொழிலாளரைப் பயிற்றுவிப்பதன் காரணமாக வேறொரு தொழிற்சாலை பயிற்றப்பட்ட தொழிலாளரை (பயிற்றுவிப்பதற்கான செலவுகள் எதுவுமின்றி) பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருத்தல்.

2) தனிப்பட்ட ரீதியில் மக்கள் கல்வி பெறுவதனால் சமூகத்திற்கு கிடைக்கும் நன்மைகள்

— கல்வி கற்றோர்தொகை அதிகரிகரித்தல்

— தேசிய உற்பத்தி அதிகரித்தல்.

— குற்றங்கள் வறுமைகள் மற்றும் சமூகப் பிரச்சனைகளிற்கு முகம் கொடுப்பதற்காக பிற தனிப்பட்டவர்களிற்கும் அரசிற்கும் ஏற்படக் கூடிய செலவுகளைக் குறைத் தல் (ஏனெனில் கல்வி பெறு வதால் குற்றங்கள், வறுமை, சமூகப் பிரச்சனை குறையும்)

இத்தகைய வெளிவாரி நன்மைகளுக்கு கட்டணம் அறவிடமுடியாது இதனால் தனிப்பட்ட நன்மைக்குள் சேர்க்கப்படுவதில்லை. எனவே வெளிவாரி நன்மைகள் சந்தை/ விலைப்பொறிக்குள் அடங்குவதில்லை.

## B) வெளிவாரிச் செலவுகள் (தீமைகள்) / எதிரக் கணிய வெளிவாரி விளைவுகள் (External Cost / Negative Externalities)

“தனிநபர் / நிறுவனம் ஒன்றின் பொருளாதார நடவடிக்கையின் (உற்பத்தி / நுகர்வு) காரணமாக அதனுடன் நேரடியாக தொடர்புபடாத பிறருக்கு செலவு (தீமை) ஏற்படுகின்றபோதும், அதன் பொருட்டு யாதேனுமொரு நட்டஈடு வழங்கப்படவில்லையாயின் அத்தகைய செலவு / தீமைகளே வெளிவாரிச் செலவுகளாகும்

(உ-ம்) 1) மரக்கைத்தொழிலுக்காகக் காடழிப்புச் செய் வதனால் மண்ணரிப்பு, மழைவீழ்ச்சி குறைதல், ஊற்றுக்கள் வற்றிவிடல், சூழல் மாசடைதல், மண்வளங்கள் குறைதல் விலங்கினங்கள் அழிதல் போன்றனவற்றினால் விவசாயத் துறையினர் பாதிக்கப்படல்.



2) ஒருவர் புகைபிடிப்பதனால் அருகில் உள்ள மற்றவரது உடல் நலத்திற்கு கேடுவிளைவித்தல்.

இத்தகைய வெளிவாரிச் செலவுகளிற்கு நட்ட ஈடு வழங்கப்படாமையால் (கணக்குகளில் பதியப் படாமையால்) தனிப்பட்ட செலவில் சேர்க்கப்படு வதில்லை எனவே வெளிவாரிச் செலவுகள் சந்தை / விலைப்பொறி முறைக்குள் அடங்குவதில்லை.

## 2. அ) உற்பத்திவெளிவாரி விளைவுகள் (ProductaionExternalities)

உற்பத்தி நடவடிக்கையின் காரணமாக உருவாக்கப்படுகின்ற வெளிவாரி விளைவுகள் இவையாகும் தனிநபர்/ நிறுவனம் ஒன்றின் உற்பத்தி நடவடிக்கையினால் உருவாக்கப்பட்டு ஏனைய உற்பத்தியாளர்களது உற்பத்தி நடவடிக்கையில் செலவுகளைக் குறைக்கவோ/அதிகரிக்கவோ செய்கின்றபோதும், அதன் பொருட்டு கொடுப்பனவோ நட்டஈடோ வழங்கப்பட வில்லையாயின் அவை தூய உற்பத்தி வெளிவாரிவிளைவுகள் ஆகும்”

உற்பத்தி வெளிவாரி விளைவுகள் **இருவகைப்படும்.**

## a) உற்பத்தியில் நேர்க்கணிய வெளிவாரி விளைவுகள் (வெளிவாரி நன்மைகள்)

“தனிநபர் / நிறுவனம் ஒன்றின் உற்பத்தி நடவடிக்கை யினால் உருவாக்கப்பட்டு ஏனைய உற்பத்தியாளர்களது உற்பத்தியில் செலவுகளைக் குறைக்க (நன்மை) செய்கின்ற போதும் அதன் பொருட்டு யாதேனுமொரு கொடுப்பனவு வழங்கப்படவில்லையாயின் அவை உற் பத்தியில் நேர்க்கணிய வெளிவாரி விளைவுகள் ஆகும்”

(உ-ம்) 1) பூக்களை விற்பனை செய்யும் நோக்கில் ஒருவர் பூந்தோட்டத்தை அமைப்பதனால் அயலிலுள்ள தேனீ வளர்ப்பாளரிற்குக் கிடைக்கும் நன்மைகள் (செலவின்றி அதிக தேன் பெறுவதனால் தேன் உற்பத்திக்கான சராசரிச் செலவு குறைதல்)

2) நிறுவனமொன்று அதன் பாதுகாப்பிற்கு தனது செலவில் பணியாளர் ஒருவரை நியமித்தால் அந்நிறுவனத்தைச் சூழவுள்ள நிறுவனங்கள் செலவு எதுவுமின்றிப் பாதுகாப்புப் பெறுதல் (பாதுகாப்புச் செலவு குறைதல்)

## b) உற்பத்தியில் எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகள் (வெளிவாரி செலவுகள்)


"தனிநபர் / நிறுவனம் ஒன்றின் உற்பத்தி நடவடிக்கையினால் உருவாக்கபட்டு ஏனைய உற்பத்தியாளர்களது உற்பத்தியில் செலவுகளை அதிகரிக்க (தீமை) செய்கின்ற போதும் அதன் பொருட்டு யாதேனுமொரு நட்டஈடு வழங்கப்படவில்லையாயின் அவை உற்பத்தியில் எதிர்க் கணிய வெளிவாரி விளைவுகள் ஆகும்"

உ-ம் 1) ஒரு இரசாயனத் தொழிற்சாலை கழிவுகளை ஆற்று நீரில் கலக்கவிடுவதால் அந்தநீரைப் பயன்படுத்தும் விவசாயியின் விளைச்சல் குறைவதால் விவசாய உற்பத்திக்கான சராசரிச்செலவு உயர்தல் (அண்மையில் பியகம ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்திலுள்ள தொழிற்சாலைக் கழிவுச் சாயங்களை களனி ஆற்றில் கலக்கவிட்டால் கொழும்பு நகரிற்கான நீர்விநியோகம் நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது)

2) பூமரங்களைத் தறித்து அவ்விடத்தில் தொழிற்சாலை கட்டுவதனால் அயலிலுள்ள தேனீ வளர்ப்பவருடைய



தேன் உற்பத்தி குறைதல். (சாரசரி செலவு உயர்தல்)




## ஆ) நுகர்வின் வெளிவாரி விளைவுகள் (Consumption Externalities)

நுகர்வு நடவடிக்கையின் காரணமாக உருவாகின்ற வெளிவாரி விளைவுகள் இவையாகும்.

"தனிநபரது நுகர்வு நடவடிக்கையினால் உருவாக்கப் பட்டு ஏனைய நுகர்வோரது பயன்பாட்டை அதிகரிக்கவோ/ குறைக்கவோ செய்கின்ற போதும் அதன் பொருட்டு யாதேனுமொரு கொடுப்பனவோ / நட்டஈடோ வழங்கப்படவில்லையாயின் அவை தூயநுகர்வின் வெளிவாரி விளைவுகள் ஆகும்."

நுகர்வின் வெளிவாரி விளைவுகள் இருவகைப்படும்:

## a) நுகர்வின் நேர்க்கணிய வெளிவாரி விளைவு கள் (வெளிவாரி நன்மைகள்)

"தனிநபரது நுகர்வு நடவடிக்கையினால் உருவாக்கப்பட்டு ஏனைய நுகர்வோரது பயன்பாட்டை அதிகரிக்கச் செய்கின்ற போதும், அதன் பொருட்டு யாதேனுமொரு கொடுப்பனவு வழங்கப்படவில்லையாயின் அவை நுகர்வின் நேர்க் கணிய வெளிவாரி விளைவுகளாகும்"

உ-ம் (1) தனிநபர் சுகாதார சேவைகளைப் பயன்படுத்துவதால் சமூகத்திற்குக் கிடைக்கும் நன்மைகள் தொற்று நோய்கள் ஒழிக்கப்படல் நோயற்ற பிரசைகளின் உருவாக்கம்

(2) குறிப்பிட்ட நபர் வாசனை தைலத்தை பூசிச் செல்வதனால் அவர் அருகில் உள்ளர் செலவின்றி நறுமணத்தை அனுபவிக்க முடிதல்

## b) நுகர்வில் எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகள் (வெளிவாரிச் செலவுகள்)

"தனிநபரது நுகர்வு நடவடிக்கையினால் உருவாக்கப்பட்டு ஏனைய நுகர்வோரது பயன்பாட்டைக் குறைக்கச் செய்கின்ற போதும் அதன் பொருட்டு யாதேனுமொரு நட்டாடு வழங்கப்படவில்லையாயின் அவை நுகர்வின் எதிக்கணிய வெளிவாரி விளைவுகள் ஆகும்."

உ-ம் 1) ஒருவர் அளவுக்கு அதிகமாக மது அருந்து வதால் அயலவரிற்கு ஏற்படும் பாதிப்புக்கள் :- தேவையற்ற வகையில் சத்தமிடல்.



2) ஒருவர் அதிக சத்தத்தில் ஒலி பெருக்கிகளைப் பயன்படுத்தும் போது அயலில் படிக்கும் மாணவன், இருதய அழுத்த நோயாளிக்கு ஏற்படும் பாதிப்புக்கள்.

## இ) கலப்பு வெளிவாரி விளைவுகள் (Mixed Externalities)

கலப்பு வெளிவாரி விளைவுகள் **இருவகையானவை.**

i) **உற்பத்தி** நடவடிக்கையால் உருவாக்கப்பட்டு பிறரின் நுகர்வு நடத்தையில் பயன்பாட்டை அதிகரிக்கவோ / குறைக்கவோ செய்வன.

உ-ம் 1) ஒருவர் பூ விற்பனைக்காக பூந்தோட்டத்தை பராமரிக்கின்றபோது வீதியால் செல்லும் பிறர் பூந்தோட்டத்தை பார்த்து ரசித்தல்.

2) தொழிற் சாலையிலிருந்து வெளியேறும் புகையினால் மாசடைந்த காற்றை அயலி லுள்ள மக்கள் சுவாசிக்க நேருதல்.

ii) **நுகர்வு** நடத்தையால் உருவாக்கப்பட்டு பிறரின் உற்பத்தி நடத்தையில் உற்பத்திச் செலவை குறைக்கவோ / அதிகரிக்கவோ செய்வன.

உ-ம் 1) ஒருவர் தனது வீட்டின் மதிலில் அழகுக்காக கண்கவர் ஓவியத்தை வரைந்ததனால் அதனைப் பார்க்கவரும் ரசிகர் கூட்டத்தினால் அயலில் உள்ள தேநீர்சாலையின் வருமா னம் அதிகரித்தல்.

2) ஒருவர் மதுசாரம் அருந்தி விட்டு சத்தம் செய்வதனால் அயலில் உள்ள கல்வி நிறுவனத்தின் வருமானம் பாதிக்கப்படல்.

**சில நடவடிக்கைகள் வெளிவாரி நன்மைகளையும் வெளிவாரிச் செலவுகளையும் கொண்டுள்ளன. அவ்வாறான சில நடவடிக்கைகளும் விளைவுகளும் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன**

| | நடவடிக்கைகள் | வெளிவாரி நன்மைகள் | வெளிவாரிச் செலவுகள் |
|---|---|---|---|
| 01 | கைத்தொழிற்சாலை அமைத்தல் | கைத்தொழில்துறை வளர்ச்சி<br>உற்பத்தி வருமானம் அதிகரித்தல்<br>தொழில்கள் அதிகரித்தல்<br>கூலிமட்டம் அதிகரித்தல்<br>மின்வசதி அதிகரித்தல்<br>நீர்வசதி அதிகரித்தல்<br>போக்குவரத்து வசதி அதிகரித்தல் | குப்பை கூழங்கள். சேர்தல்<br>காற்று மாசடைதல்<br>நீர் மாசடைதல்<br>இரைச்சலான ஒலிகள்<br>போக்குவரத்து நெருக்கடிகள் |
| 02 | வானொலி கேட்டல் | அயலவர் செய்தி, பாடல்கள் போன்றவற்றைக் கேட்டல் | அயலிலுள்ள கல்வி பயிலும் மாணவன் / நோயாளியைப் பாதித்தல் |
| 03 | தொழில்நுட்பக் கண்டுபிடிப்பு : டிரான்சிஸ்டர் | எலக்ரோனிக் தொழிலில் பாரிய முன்னேற்றம் | உலர்ந்த மின்கலங்களால் இயங்கிய வானொலி பெட்டி விற்பனை வீழ்ச்சி |
| 04 | ஆயுத உற்பத்தி | பாதுகாப்புச் சேவை அதிகரித்தல்<br>உற்பத்தி / வருமானம் அதிகரித்தல்<br>வேலைவாய்ப்பு அதிகரித்தல் | அரசியல் புரட்சிகள்<br>ஆயுத கலாச்சாரம்<br>போர் நடவடிக்கைகள்<br>அகதி வாழ்வு அதிகரித்தல்<br>சமூக, பொருளாதார அரசியல் சீரழிவு |
| 05 | கனிப்பொருள் அகழ்வு | கைத்தொழில் விருத்தி<br>உற்பத்தி வருமானம் அதிகரித்தல்<br>வேலைவாய்ப்பு அதிகரித்தல்<br>ஏற்றுமதி வருமானம்<br>அந்நிய செலாவணி அதிகரித்தல் | வளங்கள் குறைதல்<br>மண்ணரிப்பு<br>சூழல் மாசடைதல்<br>நில நடுக்கங்கள் |
| 06 | அணு உற்பத்தி | வலு / சக்தி வளம் அதிகரித்தல்<br>உற்பத்திச் செலவு குறைதல் | அணுக்கதிர் வீச்சு - உயிர் உடமைகள் அழிதல் சூழல் வெப்பமாதல் |
| 07 | விவசாயத்திற்காக காடழித்தல் | விவசாயத்துறை வளர்ச்சி உற்பத்தி / வருமானம் அதிகரித்தல்<br>தொழில் வாய்ப்பு அதிகரித்தல்<br>ஏற்றுமதி மூலம் அந்நியச் செலாவணி கிடைத்தல் | மண்ணரிப்பு<br>மழைவீழ்ச்சி குறைதல்<br>ஊற்றுக்கள் வற்றுதல்<br>மண்வளம் குறைதல்<br>சூழல் மாசடைதல்<br>சூழல் வெப்பம் அதிகரித்தல்<br>விலங்கினங்கள் அழிதல் |

## வெளிவாரி விளைவுகளும் வெளிவாரிச் சிக்கனங்கள் / சிக்கனமின்மைகளும் (Externalities and External Economies / Dis Economies)

வெளிவாரி விளைவுகள் மூலம் உற்பத்திச் செலவு குறைதல் / கூடுதல் முறையே வெளிவாரிச் சிக்கனங்கள், சிக்கனமின்மைகளுக்கு உதாரணங்களாகும்.

| | வெளிவாரி விளைவின் வகைகள் | வெளிவாரி நன்மைகள் | வெளிவாரிச் செலவுகள் |
|---|---|---|---|
| 01 | உற்பத்தியால் உருவாக்கப்பட்டு உற்பத்தியால் பெறப்படுபவை (தூய உற்பத்தி வெளிவாரி விளைவுகள்) | பக்கத்து விவசாயி வடிகால் அமைப்பை மேற்கொள்வதனால் குறிப்பிட்ட விவசாயி நன்மையடைதல் (வெளிவாரி சிக்கனங்கள்) | நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தினால் உண்டாகும் அமில மழை விவசாய அறுவடையைப் பாதித்தல். (வெளிவாரி சிக்கனமின்மைகள்) |
| 02 | நுகர்வினால் உருவாக்கப்பட்டு உற்பத்தியால் பெறப்படுபவை (கலப்பு வெளிவாரி விளைவுகள்) | தனிப்பட்ட ஒருவர் அழகுக்காக பூந்தோட்டம் அமைத்ததால் அயலில் உள்ள தேன்உற்பத்தியாளர் பெறும் நன்மை (வெளிவாரிச் சிக்கனங்கள்) | தனிப்பட்ட மோட்டார் ஓட்டுநர்களால் ஏற்படும் போக்குவரத்து நெருக்கடியினால் நிறுவனங்களது உற்பத்திச் செலவு அதிகரித்தல். (வெளிவாரிச் சிக்கன மின்மைகள்) |



ஆனால் **எல்லா வெளிவாரிச் சிக்கனங்கள் சிக்கன மின்மைகளும் வெளிவாரி விளைவுகளூடாக ஏற்படுபவை அல்ல.** (உ-ம்) குறிப்பிட்ட ஒரு நிறுவனம் சிறப்பாக செயற்பட்டு குறைந்த செலவில் உற்பத்தி செய்வதனால் குறைந்த விலையில் தனது உற்பத்தியை விற்பனை செய்கின்ற போது அதனை மூலப்பொருளாகப் பயன்படுத்தும் நிறுவனத்தின் செலவு குறைதல். இத்தகைய சிக்கனம்/நன்மை/ விலைமுறையினூடாக அடையப்படுவதால் அவை வெளிவாரி விளைவுகள் அல்ல. வெளிவாரி விளைவுகள் கட்டாயம் சந்தைக்கு வெளியே உருவாக்கப்படுவதும் பெறப்படுவதுமாக இருக்க வேண்டும்.

## IV தனிப்பட்ட சமூக செலவு/நன்மை என்பவற்றிடையிலான வேறுபாடுகள் (Divergencies between Private and Social Cost and benefit)

தனிப்பட்ட நுகர்வோரும் உற்பத்தியாளரும் தமது தனிப்பட்ட நலன்களை உச்சப்படுத்த முயல்கின்றனரே அல்லாமல் முழுச் சமூகத்திற்குமான சமூக நலனை உயர்த்துவதற்கு முயல்வதில்லை. எனவே வெளிவாரிய விளைவுகள் உள்ளநிலையில் தனிப்பட்ட நலனை உச்சப்படுத்துவதும் சமூக நலனை உச்சப்படுத்துவதும் ஒன்றாக அமைவது இல்லை ,எனவே வளங்களின் திறமையான ஒதுக்கீடு (Allocative Efficiency) பற்றி அறிந்து கொள்வதற்கு முதலில் தனிப்பட்ட செலவு - சமூகச் செலவு தனிப்பட்ட நன்மை சமூக நன்மை என்பவற்றிற்கிடையிலான வேறுபாடுகளை அறிந்து கொள்வது அவசியமாகின்றது.

**தனிப்பட்ட செலவு – சமூகச் செலவு** (Private Cost – Social Cost)

“**தனிப்பட்ட செலவு** என்பது பொருட்கள் சேவைகளின் உற்பத்தி/நுகர்வுக்காக தனிநபர் / நிறுவனத்திற்கு

ஏற்படும்செலவைக் குறிக்கின்றது" இது கணக்குகளில் பதியப்படுவதால் உற்பத்தி/நுகர்வுச் செலவுக்குள் அடங்குகிறது. இதனால் இவை சந்தை கேள்வி நிரம்பலில் பிரதி பலிப்பதன் மூலம் விலையில் உள்ளடங்கும் எனவே தனிப்பட்ட செலவுச் சந்தை/விலைப்பொறிமுறைக்கு உட்பட்டதாகும்.

உ-ம் 1) பொருட்கள் சேவைகளின் உற்பத்திக்கு பயன் படுத்தப்படும் நிலம், உழைப்பு, முதல், முயற்சி ஆகிய உற்பத்திக் காரணிகளுக்கு வழங்கப்படும் வாடகை, கூலி / சம்பளம், வட்டி இலாபம் போன்றனவும், மின்கட்டணம், காப்புறுதிக்கட்டணம், போக்குவரத்து கட்டணம், பெறுமானத்தேய்வு ஒதுக்கு போன்றன - இவை சந்தை நிரம்பலில் பிரதிபலிக்கும்.

2) குறிப்பிட்ட ஒரு பொருளை நுகர்வு செய்வதற்காக நுகர்வோனிற்கு ஏற்படும் செலவு - இது சந்தைக் கேள்வியில் பிரதிபலிக்கும்.

"**சமூகச்செலவென்பது** தனிப்பட்டசெலவையும் வெளி வாரிச்செலவையும் உள்ளடக்கியதாகும்" தனிப்பட்ட வரும் சமூகத்தின் ஓர் அங்கம் ஆகையால் தனிப்பட்டசெலவும் சமூகச்செலவினுள் அடங்கும்.

* சமூகச்செலவு = தனிப்பட்டசெலவு + வெளிவாரிச் செலவு(எதிர்க்கணிய வெளிவாரி விளைவு)

எனவே வெளிவாரிச்செலவுகள் உள்ளநிலையில் தனிப்பட்ட செலவை விட சமூகச்செலவு உயர் வானதாக இருக்கும்.

* சமூகச்செலவு > தனிப்பட்ட செலவு
வெளிவாரிச்செலவு இல்லையேல் (பூச்சியமாயின்)
தனிப்பட்டசெலவும் சமூகச்செலவும் ஒன்றாகும்)
* சமூகச்செலவு = தனிப்பட்டசெலவு
சமூகச்செலவும் வெளிவாரிச் செலவும் சமமல்ல



* சமூகச்செலவு ≠ வெளிவாரிச்செலவு
காரணம் - சமூகச்செலவில் தனிப்பட்டசெலவு அடங்கும்
-18-
-வெளிவாரிச் செலவில் தனிப்பட்ட செலவு அடங்காது.

* சமூகச்செலவு – வெளிவாரிச் செலவு = தனிப்பட்ட செலவு
* சமூகச்செலவு– தனிப்பட்டசெலவு = வெளிவாரிச் செலவு

உ-ம் வீதிபோக்குவரத்து தொடர்பாக

தனிப்பட்டகிரயம் - வாகனச் சொந்தக்காரரிற்கு ஏற்படும் எரிபொருள், சம்பளம், பெறுமானத்தேய்வு ஆகிய கிரயங்கள்

சமூகக்கிரயம் - மேற்படி தனிப்பட்ட கிரயங்களுடன் சூழல் மாசடைதல், இரைச்சல், வாகன நெருக்கடியால் ஏற்படும் பாதிப்புகள்.

## தனிப்பட்ட நன்மை – சமூக நன்மை (Private Benefit – Social Benefit)

"**தனிப்பட்ட நன்மை** என்பது பொருட்கள் சேவைகளின் உற்பத்தி/ நுகர்வினால் தனிநபர் / நிறுவனத்திற்கு ஏற்படும் அனுகூலங்களைக் குறிக்கின்றது" இவை சந்தை / விலைப் பொறிமுறைக்குட்பட்டதாகும்"

உ - ம் 1) பொருட்கள் சேவைகள் உற்பத்தி மூலம் குறிப்பிட்ட நிறுவனம் பெறும் வருமானம்
2) குறிப்பிட்ட பொருளை நுகர்வு செய்வதன் மூலம் நுகர்வோன் அடையும் திருப்தி

"சமூக நன்மை என்பது தனிப்பட்ட நன்மையையும் வெளிவாரி நன்மையையும் உள்ளடக்கியதாகும்" தனிப்பட்ட வரும் சமூகத்தின் ஓரங்கமாகையால் தனிப்பட்ட நன்மையும் சமூக நன்மையினுள் அடங்கும்

சமூக நன்மை = தனிப்பட்ட நன்மை + வெளிவாரிநன்மை (நேர்க்கணிய வெளிவாரி விளைவு)

எனவே வெளிவாரி நன்மைகள் உள்ள நிலையில்.
சமூக நன்மை > தனிப்பட்ட நன்மை
வெளிவாரி நன்மை இல்லையேல் (பூச்சியமாயின்)

சமூக நன்மை ≠ தனிப்பட்டநன்மை
சமூக நன்மையும் வெளிவாரி நன்மையும் சமமல்ல

சமூக நன்மை ≠ வெளிவாரி நன்மை
காரணம் -சமூக நன்மையில் தனிப்பட்ட நன்மை அடங்கும் வெளிவாரி நன்மையில் தனிப்பட்ட நன்மை அடங்காது

* சமூகநன்மை – வெளிவாரி நன்மை = தனிப்பட்டநன்மை
* சமூக நன்மை – தனிப்பட்ட நன்மை = வெளிவாரி நன்மை

உ – ம் வர்த்தக நோக்கில் பூந்தோட்டம் வைத்திருப்பவன் பெறும் பூக்களின் விற்பனை வருமானம் தனிப்பட்ட நன்மை ஆகும்.

அத்தகைய தனிப்பட்ட நன்மையுடன் வெளிவாரியாக அயலிலுள்ள தேனிவளர்ப்போன், பூந்தோட்டத்தைப் பார்த்து ரசிப்போர் பெறும் நன்மைகளையும் உள்ளடக்கியது சமூகநன்மை ஆகும்.



## V வெளிவாரி விளைவுகளுடாக சந்தைத் தோல்வி (Market Failure through Externalities)

"சந்தைச்சக்திகள் பொருளாதார ரீதியில் திறமையானதும் சமூக ரீதியில் நீதியானதுமான சமநிலையை அடையத்தவறுகின்ற எல்லா நிலமைகளும் சந்தைத் தோல்வி ஆகும்"அதாவது அடைந்து கொள்ளக் கூடியதாகவும் மிகச் சிறந்த நிலையை சந்தை அடையாத நிலையை இது குறிக்கின்றது இதன் கருத்து நல்லது எதுவும் நடக்கவில்லை என்பதல்ல. திறமையானவள ஒதுக்கீடு (Efficient Resources Allocation) இடம் பெறும் நிலமை

| |
|---|
| MSC = MSB |
| Marginal Social Cost = Marginal Social Benefit) |
| சமூக எல்லைச்செலவு = சமூக எல்லைநன்மை |

இத்தகைய நிலை அடையப்படாமையே சந்தைத் தோல்வியாகும். திறமையற்றவள ஒதுக்கீட்டு நிலை காணப்படுதலே சந்தைத் தோல்வியாகும்.

திறமையற்ற வள ஒதுக்கீடு இடம் பெறும் நிலமை.


MSC ≠ MSB
MSC > MSB
MSC < MSB

இத்தகைய நிலையில் சந்தை தோல்வியடைகிறது.

வெளிவாரி விளைவுகள் இத்தகைய சந்தை தோல்விக்குப் பிரதான காரணமாகும் வெளிவாரி விளைவுகளூடாக சந்தை தோல்வியடைதலை பல்வேறு அடிப்படையில் வரைபடங்களூடாக விளக்கலாம்.

## 1. உற்பத்தியில் நேர்கணிய வெளிவாரி விளைவினால் சந்தை தோல்வியடைதல்

## (உ – ம்) காடு வளரப்பு




வரைபடத்தின்படி

$D_m$ - சந்தைக்கேள்விவளையி, இங்கு நுகர்வில் வெளி வாரி விளைவு இல்லை, எனவே தனிப்பட்ட நன்மை MPB = MSB சமூக நன்மையாக காணப்படுகிறது.

$S_m$ - தனிப்பட்ட செலவின் அடிப்படையில் இருக்கின்ற சந்தை நிரம்பல் வளையி

$S_s$ - சமூகச்செலவின் அடிப்படையில் இருக்கவேண்டிய சமூக நிரம்பல் (MSC) வளையி நடைமுறையில் சந்தைத் தொழிற்பாட்டில் இது பிரதிபலிக்கப் படுவதில்லை.



$S_m$ - என்பவற்றுக்கிடையிலான நிலைக்குத்தச்சு ரீதியி லான இடைவெளி வெளிவாரி நன்மையைக் குறிக்கின்றது.

$E_2$ சமூகத்திறன் வாய்ந்த சமநிலையாகவும் (Sacially Efficent Equilibrium) (MSC = MSB). PsQs என்பது சமூகத்திறன் வாய்ந்த சமநிலை மட்டங்களாகவும், சிறந்தவள ஒதுக்கீடாகவும் அமையும்.


$E_1$ திறனற்ற சந்தைச் சமநிலையாகவும் $P_m$, $Q_m$, என்பன திறனற்ற சமநிலை மட்டங்களாகவும், திறனற்ற வளஒதுக்கீடாகவும் அமைகின்றது.

வெளிவாரி நன்மைக்கான கொடுப்பனவு செய்யப்படாமை யால் அது தனிப்பட்ட நன்மை (வருமானத்து)க்குள் சேர்க்கப்படுதில்லை. எனவே இலாபம் குறைவாக இருப்பதால் விலைமுறைமை சமூகத்திற்கு தேவையான ($Q_s$) அளவிட குறைவாக உற்பத்தி (Under production – $Q_m$) செய்கிறது திறனற்றவள ஒதுக்கீடாக (MSC < MSB இது அமைவதால் சந்தை தோல்வியடைகின்றது.

இங்கு சமூகநலன் இழப்பு (Welfare loss) $E_1$ $E_2$ A என்ற முக்கோணத்தால் காட்டப்பட்டுள்ளது.

## 2. உற்பத்தியில் எதிர்க்கணிய வெளிவாரி விளைவினால் சந்தை தோல்வியடைதல்

உ-ம் இரசாயன உற்பத்தி




வரைபடத்தின்படி,

$D_m$ சந்தைக்கேள்வி வளையி, இங்கு நுகர்வில் வெளி வாரி விளைவுகள் இல்லை. எனவே தனிப்பட்ட நன்மை MPB = MSB சமூகநன்மை

$S_m$ தனிப்பட்ட செலவின் அடிப்படையில் இருக்கின்ற சந்தை நிரம்பல் வளையி

$S_s$ சமூகச்செலவின் அடிப்படையில் இருக்கவேண்டிய சமூக நிரம்பல் (MSC) வளையி

$S_m$ – Ss என்பவற்றுக்கு இடையிலான நிலைக்குத்தச்சு ரீதியிலான இடைவெளி வெளிவாரிச் செலவைக் குறிக்கின்றது

$E_2$ சமூகத்திறன் வாய்ந்த சமநிலையாகவும் (MSC = MSR), Ps Qs என்பன சமூகத்திறன் வாய்ந்த சமநிலை மட்டங்களாகவும், சிறந்த வள ஒதுக்கீடாகவும் அமையும்.




$E_1$ திறனற்ற சந்தைச் சமநிலையாகவும், Pm, Qm என்பன திறனற்ற சமநிலை மட்டங்களாகவும், திறனற்ற வள ஒதுக்கீடாகவும் அமைகின்றது.

வெளிவாரிச் செலவுக்கான நட்டஈடு வழங்கப்படாமையால் அது தனிப்பட்ட செலவுக்குள் சேர்க்கப்படவில்லை எனவே இலாபம் உயர்வாக இருப்பதால் விலை முறைமை சமூகத்திற்கு தேவையான (Qs) அளவை விட கூடுதலான உற்பத்தி (Over Production – Qm) செய்கிறது. திறனற்ற வளஒதுக்கீடாக (MSC > MSB) இது அமைவதால் சந்தை தோல்வி அடைகின்றது.

இங்கு சமூகநலன் இழப்பு $E_1$ $E_2$ A என்ற முக்கோணத்தால் காட்டப்பட்டுள்ளது.

## 3. நுகர்வின் நேர்க்கணிய வெளிவாரி விளைவினால்சந்தை தோல்வி அடைதல்

(உ-ம்) கல்வி




வரைபடத்தின்படி

Sm – சந்தை நிரம்பல் வளையி இங்கு உற்பத்தியில் வெளிவாரி விளைவு இல்லை. எனவே தனிப்பட்ட செலவு MPC = MSC சமூகச் செலவு ஆக காணப்படுகிறது.

Dm - தனிப்பட்ட நன்மையின் அடிப்படையில் இருக்கின்ற சந்தைக் கேள்வி வளையி.

Ds- சமூக நன்மையின் அடிப்படையில் இருக்க வேண்டிய சமூகக் கேள்வி(MSB) வளையி நடைமுறையில் சந்தைத் தொழிற்பாட்டில் இது பிரதிபலிக்கப்படுவதில்லை.

DM – Ds என்பவற்றிற்கிடையிலான நிலைக்குத்தச்சு ரீதியிலான இடைவெளி வெளிவாரி நன்மையைக் குறிக்கின்றது.

E2 சமூகத்திறன் வாய்ந்த சமநிலையாகவும் (MSc = MSB), Ps, Qs என்பன சமூகத்திறன் வாய்ந்த சமநிலை மட்டங்களாகவும், சிறந்த வள ஒதுக்கீடாகவும் அமையும்.

E1 திறனற்ற சந்தைச் சமநிலையாகவும் Pm, Qm என்பன திறனற்ற சமநிலை மட்டங்களாகவும், திறனற்ற வள ஒதுக்கீடாகவும் அமைகின்றது.

வெளிவாரி நன்மைக்கான கொடுப்பனவு செய்யப்படாமையால் அது தனிப்பட்ட நன்மை (வருமானத்து) க்குள் சேர்கக்ப்படுவதில்லை. எனவே இலாபம் குறைவாக இருப்பதால் விலை முறைமை சமூகத்திற்கு தேவையான (Qs) அளவிட குறைவாக உற்பத்தி (Under Production) செய்கின்றது திறனற்ற வள ஒதுக்கீடாக (MSC < MSB) இது அமைவதால் சந்தை தோல்வியடைகின்றது.

இங்கு சமூகநலன் இழப்பு $E_1$ $E_2$ A என்ற முக்கோணத்தால் காட்டப்பட்டுள்ளது.



4. நுகர்வில் எதிர்கணிய வெளிவாரி விளைவுகள் உள்ள நிலையிலும் இதே போல சமூகத்தேவைக்கு கூடுதலாக உற்பத்தி இடம்பெறுவதால் சந்தை தோல்வியடைகின்றது. (உ-ம்) சிகரட்,சாராயம், (இதற்கும் வரைபடமூலம் விளக்கலாம்).

## VI வெளிவாரி விளைவுகளை சீரசெய்ய அரசாங்கம் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள்

I. அளவுக் கட்டுப்பாடுகள் /சட்டப்பிரமாணங்கள்

II. வரிவிதிப்பும் மானியம் வழங்கலும்

III. மேற்கூறிய இருவழி முறைகளையும் சேர்த்துப் பயன்படுத்தல்.

### I. அளவுக் கட்டுப்பாடுகள்/சட்டப்பிரமாணங்கள்

இவை நேரடியாக வெளிவாரி அளவுகளில் செல்வாக்குச் செலுத்துகின்றன. இவை சந்தையைச் சீரமைப்பதைவிட சந்தைப் பதிலீட்டு நடவடிக்கைகளாக அமைகின்றன.

A. சூழல் மாசடைதல் போன்ற வெளிவரிக் செலவுகளை சட்டங்கள் மூலம் மிகவும் முற்றாக நிறுத்துதல். இது மிகவும் தீவிரமான நடவடிக்கையாகும்.

B. வெளிவாரி நன்மை உள்ளவற்றின் உற்பத்தியைக் கட்டாயமாக்குதல்

(உ-ம்)

வீட்டுக்கு ஒரு மரம் முற்றத்தில் நாட்டுதலை கட்டாயமாக்குதல்

தடுப்பூசி ஏற்றலை கட்டாயமாக்குதல்

C. வெளிவாரிச் செலவை முற்றாகத் தடை செய்வது உற்பத்தியை தடைசெய்ய நேரிடலாம், எனவே குறிப்பிட்ட குறைந்தளவு மாசடைதலை அனுமதித்தல்.

II. வரி விதிப்பும் , மானியம் வழங்கலும்

இவை சந்தை விலையை சரிசெய்வதன் மூலம் சந்தையில் தவறவிடப்பட்ட தூண்டுதலை உருவாக்குகின்றன. வரிகள் மூலம் வெளிவாரிச் செலவுகளை குறைக்கவும், மானியங்கள் மூலம் வெளிவாரி நன்மைகளை அதிகரிக்கவும் தூண்டுதலை வழங்க முடியும். எனவே இவை சந்தை / விலைமுறையை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கையாகும்

இவ்வகையில் இவை சந்தை சார்ந்த தீர்வுமுறைகளாகும். இவ் வழிமுறை வெளிவாரி விளைவுகளை உள்வாரியாக்கு சின்றது. தற்போது சந்தை சார்ந்த முறைகளில் கூடிய கவனம் செலுத்தப்படுகிறது.

அடுத்து நேர்கணிய எதிர்கணிய வெளிவாரி விளைவுகள் எவ்வாறு அரசினால் சீரமைக்கப்படுகின்றன என்பதனை நோக்குவோம்.

## 1. நேர்க்கணிய வெளிவாரி விளைவுகளைச சீரமைத்தல்


நேர் வெளிவாரி விளைவுகள் (நன்மை) உள்ள நிலையில் அரசாங்கம் உற்பத்தியாளர்/நுகர்வோரிற்கு மானியங்களை வழங்குவதன் மூலம் சந்தைக்கேள்வி, நிரம்பல், சமநிலை மட்டத்திலிருந்து சமூககேள்வி நிரம்பல் சமநிலை மட்டத்திற்கு மாற்றி சமூகத்திறன் வாய்ந்த சமநிலையை

அடையச் செய்யலாம். இதன் மூலம் சந்தைத் தோல்வி சீரமைக்கப்படுகின்றது.



வரைபடத்தின்படி அலகுரீதியாக $AE_2$ என்றளவு (வெளிவாரி நன்மைக்கு சமமான) மானியத்தை வழங்குவதன் மூலம் நிரம்பலை($S_s$ ஆக) அதிகரித்து $E_2$ என்ற சமூகத்திறன் வாய்ந்த சமநிலையை அடையலாம்.

உ+ ம்: கல்வி




உ-ம்: இலங்கையில் அரசாங்கம் மக்கள் யாவர்க்கும் சம கல்வி வாய்ப்பினை வழங்கி வெளிவாரி நன்மையை சமூகம் அனுபவிக்கப் பல்வேறு வகையான மானியங்களை நுகர்வோருக்கும் (மாணவரிற்கும்) உற்பத்தியாளருக்கும் (அரச தனியார் பாடசாலைகளிற்கும்) வழங்குகின்றது. இதன் மூலம் குறையுற்பத்தியை நீக்கி, வளங்களை ஓரளவு திறமையாகப் பயன்படுத்துவதுடன் சந்தைத்தோல்வியும் சீரமைக்கப்படுகின்றது.

## 2. எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகளைச் சீரமைத்தல்:

எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகள் (செலவு) உள்ள நிலையில் அரசாங்கம் அதனைச் சீர்திருத்தும் வகையில் வெளிவாரிச் செலவுகளை ஈடு செய்விப்பதன் மூலம் சந்தை நிரம்பலை (இடதுபுறமாக) சமூக நிரம்பல் மட்டத்திற்கு நகர்த்தி அதன் மூலம் சமூகத்திறன் வாய்ந்த சமநிலை மட்டத்தை அடைய முயற்சிக்கின்றது. இதற்காக அரசாங்கம்

1. சட்டப்பிரமாணங்கள்
2. வரிவிதிப்பு

போன்றவற்றின் மூலம் நிரம்பலைக் கட்டுப்படுத்த முயல்கின்றது.

## I. சட்டப் பிரமாணங்கள்

(உ-ம்) 1. இரசயானத் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் புகை, தூசி, கழிவு நீர், விசவாயுக்கள், இரைச்சல் போன்றவை மனிதனைப் பாதிக்கின்றன. இதனைத் தடுப்பதற்கு வெளிவாரிச் செலவுகளை ஈடுசெய்யும் வகையில்.

A வடிகட்டும் கருவிகள் (Filters)

B துடைக்கும் கருவிகள் (Scrubbers)

C தன்னியக்க கழிவு அகற்றும்முறை (Auto ExchustSystem)

போன்றவற்றை அமைக்கவேண்டுமென சட்டரீதியில் கட்டாயப்படுத்துவதன் மூலம் அவற்றுக்கான செலவை நிறுவனமே தாங்கச் செய்யலாம். இச்செலவுகள் சுமத்தப்படுவதால் இலாபம் குறைந்து சந்தை நிரம்பல் குறைவடையும். இவ்வாறு வெளிவாரிச் செலவினங்கள் கட்டுப்படுத்தப்படுவதனால் சந்தைத் தோல்வி சீரமைக்கப்படுகிறது.


(உ-ம்) அரசு சட்டரீதியாக அதிக புகையேற்றும் வாகன உரிமையாளர்களை அதைத் தடுப்பதற்கான கருவிகளைப் பயன்படுத்துமாறு வற்புறுத்துவதுடன், அவ்வாறு செய்யாதோர் மீது குற்றப்பணத்தை அறவிடல் / அவ்வாகனங்களின் சேவையை இடை நிறுத்தல் போன்றன பின்பற்றப்படுவதன் மூலம் வெளிவாரிச் செலவுகள் கட்டுப்படுத்தப்படுகின்றன.



## 2. வரி விதித்தல்

அரசாங்கம் வரிவிதிப்பதன் மூலம் எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகளைக் கட்டுப்படுத்த முடியும். அதாவது உரிமையாளரிடம் மாசுபடுத்தலுக்கான வரியை **(Pollution Tax)** அறவிடலாம். இந் நிலையில் அரசாங்கம் சூழல் மாசடைதலைத் தவிர்ப்பதற்கான தடுப்புக் கருவிகளைப் பயன்படுத்துமாறு நிர்ப்பந்திக்க வேண்டியதில்லை. நிறுவனங்களும், வீட்டுத்துறையும் தாம்செலுத்துகின்ற வரியின் அளவைக் குறைப்பதற்காக மாற்று வழிகளைக் கண்டு பிடித்து தாமாகவே சூழல் மாசடைதலைத் தவிர்க்க முயல்வர்.

கீழுள்ள வரைபடத்தின்படி அலகு ரீதியாக $AE_1$ (வெளிவாரி நன்மைக்கு சமமான) அளவு வரியை விதிப்பதன் மூலம் சந்தை நிரம்பலை (Ss ஆக) குறைத்து $E_2$ என்ற சமூகத்திறன் வாய்ந்த சமநிலையை அடையலாம்.




## மாசுபடுத்தல் - வெளிவாரி விளைவு

* உற்பத்தி நடவடிக்கையின் விளைவான மாசுபடுத்தல் ஒரு வெளிவாரி விளைவாகும். அதற்கான காரணங்கள்

* உற்பத்தியுடன் தொடர்புபடாத பிறரிற்கு அதனால் பாதகமான விளைவுகள் ஏற்படுகின்றபோதும் அதன் பொருட்டு யாதேனுமொரு நட்டஈடு வழங்கப்படுவடுதில்லை யாதலால் உற்பத்தியாளரின் செலவில் உள்ளடக்கப்படுவதில்லை.
* வர்த்தகக் கொடுப்பனவின் போது விலையினுள் சேர்க்கப்படாத செலவாக காணப்படுவதனால் சமூகம் தாங்கவேண்டியுள்ளது. எனவே சமூகம் அடைகின்ற நன்மையினளவு குறைகின்றது.

சூழல் மாசடைதலைக் கட்டுப்படுத்த அரசாங்கம் எடுக்கும் **நடவடிக்கைகள்.**

1. சூழல் பாதுகாப்புப்பற்றி பொது அபிப்பிராயத்தை உருவாக்கு தல்
2. சூழல் பாதுகாப்பு முகவராண்மையை (Envaironmental Protection Ageney (EPA) ) ஒருவாக்குதல்
3. சந்தை சார்ந்த பேச்சுவார்த்தை
4. சட்ட ஒழுங்கு விதிகளை அமுல்படுத்தல்
5. மாசடைதலைக் குறைக்க மானியம் வழங்குதல்
6. மாசடைதல் வரி விதித்தல்/
7. மாசடைதல் அனுமதிப் பத்திரங்களை வழங்குதல். (Pollution Pemits)
8. உடமை உரிமைகளை (Property Rights) உறுதிப்படுத்தல்

## கடந்தகாலப் பரீட்சை வினாக்கள்

(01) (i) "சந்தைத்தோல்வி" என்ற எண்ணக்கருவை விளக்குக.
(ii) "சந்தைமுறைமை புறக்காரணிகள் இருக்கும் நிலையில் தோல்வியடைகின்றது" விளக்கக் குறிப்புகள் எழுதுக.

(1995)

(02) "ஓர் இரசாயனத்தொழிற்சாலை தனது கைத்தொழிற் கழிவுகளை ஒரு ஆற்றிற்குள் தள்ளுகின்றது"



"இயற்கைக் காடொன்றை வெட்டுவதன் மூலம் ஒரு அரிமரத் தொழிற்சாலை தனது மூலப்பொருட்களைப் பெறுகின்றது"

(i) மேலே குறிப்பிட்ட இரண்டு உதாரணங்கள் மூலமும் வெளிப்படுத்தப்படும்' சமூகச்செலவு' என்ற எண்ணக் கருவை விளக்குக.

(ii) இத்தகைய சமூகச் செலவுகள் காணப்படும் போது விலைத்திட்டம் செயற்படும்விதம் பற்றி நீர் யாது கூறுவீர்?

(1988)

(03) (i) உற்பத்தி நடவடிக்கையின் விளைவான மாசு படுத்தல் ஒரு வெளிவாரி விளைவாகக் கருதப் படுவதேன்?

(ii) நுகர்வு நடவடிக்கையிலிருந்து பெறப்படும் நேர்க் கணிய வெளிவாரிவிளைவுகளுக்கு இரண்டு உதாரணங்கள் தருக.

(iii) வெளிவாரி விளைவுகளிலிருந்து ஏற்படக்கூடிய சந்தைத் தோல்விகளைச் சரிப்படுத்துவதற்கு ஓர் அரசாங்கம் எத்தகைய வழிமுறைகளைக் கையாளலாம்?

(1997)

(04) "வெளிவாரிநிலைகள் இருப்பதால் உற்பத்தி உத்தம அளவுகளைச் சென்றடைவதில்லை" இக்கூற்றை ஏற்றுக் கொள்வீரா? உமது விடைக்குக் காரணங்கள் தருக.

(1998)

## பயிற்சி வினாக்கள்

(01) வெளிவாரி விளைவுகள் என்பதில் **“வெளிவாரி(External)”** என்பது எதனைக் குறிக்கின்றது?

(02) **“வெளிவாரி விளைவுகள்”** என்பதன் கருத்து யாது?

(03) வெளிவாரி விளைவுகளை எவ்வழிகளில் வகைப் படுத்துவீர்?

(04) வெளிவாரி விளைவுகளை **விளைவின் தன்மையின்** அடிப்படையில் வகைப்படுத்துக.

(05) வெளிவாரி விளைவுகளை **பொருளாதார நடவடிக்கையின்** அடிப்படையில் வகைப்படுத்துக.

(06) “வெளிவாரி நன்மைகள் (நேர்கணிய வெளிவாரி விளைவுகள்)” என்பதன் கருத்து யாது? உதாரணம் தருக.

(07) “வெளிவாரிச் செலவுகள் ( தீமைகள்) / எதிர்கணிய வெளிவாரி விளைவுகள்” என்பதன் கருத்து யாது?

(08) **“உற்பத்தி வெளிவாரி விளைவுகள்”** என்பதன் கருத்து யாது? உதாரணம் தருக.

(09) உற்பத்தி வெளிவாரி வில்ளைவுகளை **வகைப்படுத்துக.** ஒவ்வொரு வகைக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக.

(10) “உற்பத்தியில் **நேர்கணிய** வெளிவாரி விளைவுகள் ( வெளிவாரி நன்மைகள்) என்பதன் கருத்து யாது? அதற்கு உதாரணம் ஒன்று தருக.

(11) “உற்பத்தியில் எதிர்கணிய வெளிவாரி விளைவுகள் ( வெளிவாரிச் செலவுகள்)” என்பதன் கருத்து யாது? அதற்கு உதாரணம் ஒன்று தருக.

(12) **“நுகர்வில்** வெளிவாரி விளைவுகள்” என்பதன் கருத்து யாது? உதாரணம் தருக.

(13) நுகர்வில் வெளிவாரி விளைகளை வகைப்படுத்துக. ஒவ்வொரு வகைக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக.

(14) “நுகர்வில் நேர்கணிய வெளிவாரி விளைவுகள் ( வெளிவாரி நன்மைகள்)” என்பதன் கருத்து யாது, அதற்கு உதாரணம் ஒன்று தருக.



(15) “நுகர்வில் எதிர்கணிய வெளிவாரி விளைவுகள் ( வெளிவாரிச் செலவுகள்)” என்பதன் கருத்து யாது? இதற்கு உதாரணம் ஒன்று தருக?

(16) “கலப்பு வெளிவாரி விளைவுகள்” என்பதன் கருத்து யாது? அதனை இருவகைப்படுத்துக, ஒவ்வொரு வகைக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக?

(17) **“எல்லா வெளிவாரிச் சிக்கனங்கள், சிக்கனமின்மைகளும்** வெளிவாரி விளைவுகளுடாக ஏற்படுபவை அல்ல” இக்கூற்றை உதாரணம் ஒன்றின் மூலம் தெளிவுபடுத்துக.

(18) உற்பத்தி மூலம் ஏற்படுத்தப்படும் வெளிவாரிச் செலவுக்கான ஒரு உதாரணம்.

(i) தொழிலாளருக்கு வழங்கியிருக்கும் வைத்திய சேவை களுக்கு நிறுவனம் வழங்கும் செலவுகள்
(ii) தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் அசுத்தங்க ளாகும்.
(iii) தொழிற்சாலைக்கு வெளியே ஏற்பட்ட உற்பத்தி தொடர்பான தொழிற்சாலை செலவு
(iv) நிறுவனங்கள் மூலம் பொருட்களின் விளம்பரத்துக் காகச் செய்யப்படும் செலவுகள்.
(v) அருகிலுள்ள பாதைகளை மேற்பார்வை செய்யத் தொழிற்சாலைக்கு ஏற்படும் செலவுகள்

(19) பின்வரும் நிகழ்வுகளில் உற்பத்தியில் வெளிவாரி விளைவுகளைக் காட்டும் சந்தர்ப்பங்களைத் தெரிவு செய்க.

(i) காடழிப்பினால் ஏற்படும் மண்ணரிப்பு
(ii) குறிப்பிட்ட ஒரு தொழிற்சாலையில் ஊழியர் களைப் பயிற்றுவிப்பதனால் உற்பத்தி அதி கரித்தல்
(iii) கைத்தொழிற்சாலையொன்றிலிருந்து வெளியேற்றப் படும் கழிவுகளால் ஆற்று நீர் மாசடைதல்
(iv) வெள்ளப்பெருக்கினால் பயிரழிவு ஏற்படல்

(20) ஒரு பண்டத்தின் உற்பத்தியினால் தனிப்பட்ட நன்மையை விட சமூகநன்மை உயர்வாக இருப்பின் அரசாங்கம்

(i) அப்பண்டத்தின் உற்பத்திக்கு மானியம் வழங்க வேண்டும்
(ii) அப்பண்டத்தின்மீது அலகுவரிவிதித்தல் வேண்டும்.
(iii) அப்பண்டத்தின் மீது பெறுமானவிகித வரிவிதித்தல் வேண்டும்.
(iv) அப்பண்டத்தின் மீது உச்சவிலைக் கட்டுப்பாட்டை மேற்கொள்ள வேண்டும்.

(21) பொதுவாகப் பொருட்களின் நுகர்வின் போது எதிர்க்கக் கூடியவெளித்தாக்கங்கள் ஏற்படுவது

(i) விலை அறவிடப்படாததாலாகும்
(ii) அதிக நுகர்வினாலாகும்
(iii) உற்பத்திச் செலவின்மையாலாகும்
(iv) அறியாமையாலாகும்
(v) போட்டித்தன்மை காரணமாகும்

(22) கீழே கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு சந்தாப்பத்திலும் ஏற்படும் வெளிவாரியான தாக்கங்களைக் காட்ட உதாரணங்களைக் கொண்ட பட்டியல் ஒன்றைத் தயாரியுங்கள்.

(i) பொதுப்பொருட்களின் நுகர்வின் போது
(ii) தொழிற்சாலைகளினால்
(iii) நுகர்வினால்
(iv) நவீன தொழில் நுட்பக் கண்டுபிடிப்பினால்

(23) வேறுபடுத்துக.

(i) வெளிவாரி நன்மை – வெளிவாரிச் செலவு (நேர் வெளிவாரி விளைவுகள் - எதிர் வெளிவாரி விளைவுகள்)



(ii) உற்பத்தியில் வெளிவாரி விளைவுகள்- நுகர்வில்' வெளிவாரி விளைவுகள்
(iii) உற்பத்தியில் நேர்கணிய வெளிவாரி விளைவுகள் -உற்பத்தியில் எதிர்கணிய வெளிவாரி விளைவுகள்
(iv) நுகர்வில் நேர்கணிய வெளிவாரி விளைவுகள் நுகர்வில் எதிர்கணிய வெளிவாரி விளைவுகள்.
(v) தனிப்பட்ட செலவு – சமூகச்செலவு
(vi) தனிப்பட்ட நன்மை – சமூகநன்மை
(vii) சந்தைச் சமநிலை மட்டம் சமூகத்திறன் வாய்ந்த சமநிலை மட்டம்

(24) (i) சமூகச்செலவு = தனிப்பட்ட செலவு + ...............
(ii) தனிப்பட்டநன்மை = சமூகநன்மை - ...................
(iii) ................... இல்லையேல் தனிப்பட்ட செலவு = சமூகச்செலவு
(iv) ........... உள்ள நிலையில் தனிப்பட்ட நன்மையை விட சமூகநன்மை உயர்வாகும்

(25) **"சந்தைத் தோல்வி"** என்பதன் கருத்து யாது?

(26) "வெளிவாரி விளைவுகளூடாக சந்தை தோல்வியடைகிறது" இக்கூற்றினை உதாரணங்கள் மூலம் விளக்குக.

(27) (i) "நேர் வெளிவாரி விளைவுகளினால் சந்தை தோல்வியடைகிறது" விளக்கம் தருக.
(ii) "எதிர் வெளிவாரி விளைவுகளினால் சந்தை தோல்வியடைகிறது" விளக்கம் தருக.

(28) (i) நேர்வெளிவாரி விளைவு, தவறான வள ஒதுக்கீடு, சந்தைத்தோல்வி என்பவற்றிற்கிடையிலான தொடர்பை விளக்குக.
(ii) எதிர்மறை வெளிவாரி விளைவு, தவறான வள ஒதுக்கீடு, சந்தைத்தோல்வி என்பவற்றிற்கிடையிலான தொடர்பை விளக்குக.

(29) வெளிவாரி விளைவுகளைச் சீர் செய்ய அரசாங்கம் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் யாவை?

(30) (i) நேர் வெளிவாரி ( நன்மை)களை அரசு எவ்வழி களில் சீர்செய்யலாம்?

(ii) எதிர் வெளிவாரி (தீமை)களை அரசு எவ்வழி களில் சீர்செய்யலாம்?

(31) "வெளிவாரி விளைவுகள் விலை/ சந்தை முறைமைக்கு உட்பட்டவையல்ல" விளக்கம் தருக?

(32) சமூகச்செலவு கூடியபொருளொன்றை உற்பத்தி செய்வது

(i) நிறுத்தப்படவேண்டும்

(ii) அபிவிருத்தி செய்ய வேண்டும்

(iii) தொடர வேண்டும்

(iv) அதைரியப்படுத்த வேண்டும்

(v) மேற் கூறிய எவையுமில்லை

(33) விலையிடும் முறை தோல்வியடையக் காரணம்

(i) அரசாங்கத் தாக்கங்கள்

(ii) வெளிவாரியான சிக்கனங்கள், சிக்கனமின்மைகள்

(iii) நிறைபோட்டி அற்றுப் போவது

(iv) மேற் கூறிய யாவும்

(v) மேற் கூறிய எவையும் அல்ல

(34) பின்வருவனவற்றுள் சரியான கூற்றுக்களைத் தெரிவு செய்க.

(i) வெளிவாரிச் செலவு உள்ள நிலையில் உற்பத்தியானது சமூகரீதியில் இருக்க வேண்டிய மட்டத்தைவிட குறைவாகவே தனியாரால் மேற்கொள்ளப்படும்.



(ii) வெளிவாரி நன்மை உள்ள நிலையில் உற்பத்தியானது சமூகரீதியில் இருக்க. வேண்டிய மட்டத்தினை விட குறைவாகவே தனியாரால் மேற்கொள்ளப்படும்.

(iii) நேர் வெளிவாரிவிளைவுகள் உள்ளநிலையில் தனிப்பட்ட நன்மையைவிட சமூக நன்மை உயர்வானதாக இருக்கும்.

(iv) எதிர் - வெளிவாரிவிளைவுகள் உள்ளநிலையில் தனிப்பட்ட செலவைவிட சமூகச் செலவு குறைவாக இருக்கும்.

(35) பின்வருவனவற்றில் நேரான வெளிவாரி விளைவுகள்

(i) நிர்வாகச் சிக்கனங்களால் நிறுவன இலாபம் அதிகரித்தல்

(ii) குறிப்பிட்ட நபர் வளவைச் சுத்தமாக வைத்திருப்பதனால் அயலவரிற்கு ஈக்களின் தொல்லை குறைதல்.

(iii) தொழிற்சாலைப் புகையினால் அயலவரிற்கு ஏற்படும் நுரையீரல் பாதிப்புக்கள

(iv) ஒரு நிறுவனம் மலிவாக மூலப்பொருளை வழங்குவதனால் முடிவுப்பொருள் உற்பத்தி செய்யும் மற்ற நிறுவனத்தின் இலாபம் அதிகரித்தல்.

(v) தொழிற்சாலையிலிருந்து சூடான நீர் ஆற்றில் கலப்பதால் ஆற்றில் மீன்பிடிக்கும் மீனவரது உற்பத்தி/ வருமானம் அதிகரித்தல்.

(36) (i) "சில வகைப் பொருள்களை நிரம்பல் செய்யும் போது உற்பத்தியாளர் மேற்கொள்ளும் செலவுக்கு மேலதிகமாக சமூகமும் செலவொன்றை மேற்கொள்ள வேண்டியுள்ளது" இக்கூற்றை உதாரணமொன்றின் மூலம் விளக்குக.

(ii) மேலே (i) இல் கூறப்பட்டுள்ள நிரம்பல் நிலைமையின் கீழ் சந்தையொன்றின் இயக்கம் பற்றி நீர் யாது கூறுவீர்?

(37) புதிய வீதி அமைக்கப்படுவதனால் ஏற்படக்கூடிய வெளிவாரி விளைவுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(38) "ஒருவர் புகைபிடிப்பதனால் அருகிலுள்ள மற்றொருவருக்கு கேடு விளைவித்தல்" இதனை விளக்கப் பயன்படுத்தக் கூடிய பொருளியல் எண்ணக்கருவைக் குறிப்பிடுக.

(39) செலவு- நலன் ஆய்வின் அடிப்படையிலான மூன்று முதலீட்டுத்திட்டங்கள் பற்றிய தரவுகள் கீழே தரப்படுகின்றன.

| | திட்டம் J | திட்டம் K | திட்டம் L |
|---|---|---|---|
| தனிப்பட்ட நன்மை ( மில்.ரூபா) | 125 | 140 | 50 |
| தனிப்பட்ட செலவு (மில்.ரூபா) | 115 | 150 | 90 |
| வெளிவாரி நன்மை (மில்.ரூபா) | 75 | 50 | 200 |
| வெளிவாரிச் செலவு (மில்.ரூபா) | 100 | 10 | 150 |

பொருளாதார நலனை மூன்னேற்றுவதற்கு செயற்படுத்தக்கூடியது.

(i) திட்டம் K மட்டும் (ii) திட்டம் J யும் , K யும்
(iii) திட்டம் K யும் L உம்
(iv) திட்டம் J யும் Kயும் , L உம்

(40) மின்சார நிலையத்திலிருந்து வெளியேறும் நச்சு வாயுவை குறைப்பதற்கு Filters ஐ பயன்படுத்த அரசு தீர்மானித்துள்ளது. தேறிய சமூகநலனை உச்சப்படுத்துவதற்கு அரசு Filters ஐ பின்வரும் எந்த நிலைவரை பயன்படுத்த வேண்டும்.

(i) மொத்த சமூகநலன் உச்சப்படுத்தப்படல்
(ii) எல்லைச் சமூக நலன் உச்சப்படுத்தப்படல்
(iii) மொத்தச் சமூகநலன்-மொத்தச் சமூகச்செலவு = 0
(iv) எல்லைச் சமூகநலன்- எல்லைச் சமூகச்செலவு= 0



(41) ஒரு நிறுவனத்தின் தனிப்பட்ட செலவு சமூகச்செலவுக்கு சமனாகவில்லை. ஏனையவை மாறவில்லை எனின் சமூகநலனை முன்னேற்றுவதற்கு பின்வருவனவற்றில் அரசு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கை.

(i) அதன் தனிப்பட்ட செலவைவிட சமூகச்செலவு குறைவாயின் நிறுவனத்தின்மீது வரிவிதிக்க வேண்டும்.

(ii) அதன் தனிப்பட்ட செலவைவிட சமூகச்செலவு உயர்வாயின் நிறுவனத்தின் மீது வரிவிதிக்க வேண்டும்.?

(iii) அதன் தனிப்பட்ட செலவைவிட சமூகச் செலவு உயர்வாயின் நிறுவனத்திற்கு உதவிப்பணம் வழங்க வேண்டும்.

(iv) அதன் சமூக நன்மையிலிருந்து சமூகச்செலவைக் கழிக்குமிடத்து நேர்கணியமாயின் நிறுவனத்தை மூடவேண்டும்.

(42) இரசாயனத்தொழிற்சாலை நதியை மாசுபடுத்தும் நடவடிக்கையின் அடிப்படையிலான தரவுகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வெளியீடு ( அலகுகள்) | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| சராசரி வருமானம்(ரூபா) | 14 | 12 | 10 | 8 | 6 | 2 |
| தனிப்பட்ட எல்லைச்செலவு(ரூபா) | 2 | 4 | 6 | 8 | 10 | 14 |
| வெளிவாரி எல்லைச் செலவு(ரூபா) | 2 | 3 | 4 | 5 | 6 | 8 |

வெளிவாரி நன்மை எதுவும் இல்லை என எடுகோள் கொண்டால் சமூகரீதியில் திறமையான வெளியீட்டு மட்டம்

(i) 2 (ii) 3 (iii) 4 (iv) 5 (v) 6

(43) சந்தை முறைமையினால் வழங்கக் கூடிய பண்டமாயினும், நேர்கணியவெளிவாரி விளைவுகளைக் கொண்டிருப்பதனால் பெரும்பாலும் அரசினாலும் வழங்கப்படுவது

(1) மேன்மைப்பண்டங்கள் (2) பொதுப்பண்டங்கள்
(3) கௌரவப்பொருட்கள் (4) இழிவுப்பொருட்கள்

(44) உற்பத்தி நடவடிக்கையால் ஏற்பட்ட வெளிவாரிச் செலவுக்குச் சமமாக அரசாங்கம் நிறுவனத்தின் மீது வரிவிதிக்குமாயின் அதன் விளைவு

(i) உயர்ந்த செலவை ஈடுசெய்வதற்காக நிறுவனம் தனது வெளியீட்டை அதிகரிக்கும்.

(ii) உற்பத்தியும் வள ஒதுக்கீடும் மாறாது.

(iii) நிறுவனத்தின் தனிப்பட்ட செலவுக்கும் சமூகச் செலவுக்கும் இடையிலான இடைவெளியை வரி அதிகரிக்கச் செய்யும்.

(iv) செலவு நலன் அடிப்படையில் விலை அசைவதனால் வள ஒதுக்கீட்டில் முன்னேற்றமுண்டாகும்.

(45) பின்வருவனவற்றில் தூயபொதுப்பண்டமாகக் கருதக் கூடியது எது?

(i) கல்வி (ii) வெள்ளப்பாதுகாப்பு
(iii) வைத்தியப்பராமரிப்பு (iv) தபால்சேவை

(46) மேன்மையில்லாப் பண்டமானது (**Demerit goods**)

(i) நேர்வெளிவாரி விளைவை உருவாக்கும்



(ii) கறுப்புச் சந்தையில் மட்டும் வாங்கப்படும்

(iii) சந்தைப்பொருளாதாரத்தில் மேலதிகமாக நுகரப்படுகிறது.

(iv) உற்பத்தியிலும், நுகர்விலும் வெளிவாரிச் செலவில்லாதது

**(47)** X பண்டத்தின் தனிப்பட்ட எல்லைச் செலவிலும் பார்க்க சமூக எல்லைச் செலவு அதிகமானது y பண்டத்தின தனிப்பட்ட எல்லை நன்மையிலும் பார்க்க சமூக எல்லை நன்மை அதிகமானது எனவே சுதந்திர சந்தையின் உற்பத்தி

(i) x உம் Y உம் உத்தம அளவு

(ii) அதிகளவு X உம் , குறைந்தளவு y உம்

(iii) குறைந்தளவு X உம் , குறைந்தளவு y உம்

(iv) மேற்கூறிய எவையுமில்லை.

(48) தனிப்பட்டசெலவைவிட சமூகச்செலவு உயர்வாக இருக்கும்போது அதனை பொருளியலாளர் பின்வருமாறு அழைப்பர்.

(i) நேர்கணியவெளிவாரிவிளைவு

(ii) குறை உற்பத்தி

(iii) எதிர்கணிய வெளிவாரி விளைவு

(iv) வளங்களின் சமூக உயர்வு

(49) இரசாயனத் தொழிற்சாலை ஒன்று தனது கழிவுகளை ஆற்றுநீரில் தள்ளுவதால் ஆற்றுநீா் மாசுபடுத்தப்படுகிறது விலை ஏற்பவராக ( Price Taker) விளங்கும் நிறுவனம் 1 லீற்றா் இரசாயனத்திரவத்திற்கு 100 ரூபாவை விலையாகப் பெறுகிறது.

| உற்பத்தி | 1 லீற்றா் விலை | தனிப்பட்ட எல்லைச் செலவு(ரூபா) | வெளிவாரி எல்லைச் செலவு ரூபா |
|---|---|---|---|
| 1 | 100 | 60 | 20 |
| 2 | 100 | 80 | 20 |
| 3 | 100 | 100 | 20 |
| 4 | 100 | 120 | 20 |
| 5 | 100 | 140 | 20 |

(i) நிறுவனம் தனிப்பட்ட செலவு, நன்மையை மட்டும் கவனத்தில் கொள்கிறது என்ற எடுகோளின் அடிப்படையில் இலாபத்தை உச்சப்படுத்தக்கூடிய வெளியீட்டு மட்டம் என்ன, உமது விடையை வரைபடமூலம் விளக்குக.

(ii) சமூக ரீதியில் உத்தம வெளியீட்டு மட்டம் என்ன?

(iii) சமூகரீதியில் உத்தம வெளியீட்டு மட்டத்தை அடைய அரசு எத்தகைய நடவடிக்கை எடுக்கலாம்?

(50) **சூழல் மாசடைதலைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் யாவை?**



# விடைகள்

**(முக்கிய பயிற்சி வினாக்களுக்கானவை)**
**- ஏனையவற்றிற்கு கட்டுரையில் நேரடியாகப் பெறலாம்)**

**01.** சந்தை / விலைப்பொறிமுறையின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது / வெளியேயானது என்பதைக் குறிக்கின்றது.

**18.** (ii) 19. (i), (iii)

**20.** (i) 21. (i)

**24.** (i) வெளிவாரிச் செலவு (ii) வெளிவாரி நன்மை

(iii) வெளிவாரிச் செலவு (iv) வெளிவாரி நன்மை

**26.** நேர் வெளிவாரி விளைவு உள்ள நிலையில் குறை உற்பத்தியும், எதிர் வெளிவாரி விளைவு உள்ள நிலையில் மிகை உற்பத்தியும் இடம் பெறுவதால் சமூகத்திறன் வாய்ந்த உத்தம உற்பத்தி மட்டம் அடையப்படாமையால் சந்தை தோல்வியடைகின்றது என்பதனை விளக்குதல், உதாரணங்கள் வழங்கப்படவேண்டும்.

**32.** (iv) 33. (iv) 34. (ii), (iii) 35. (ii) (v)

**37.**
- இயற்கை அழகு பாதிக்கப்படல்
- தூசியால் சூழல் மாசடைதல்
- வாகன இரைச்சல்

} அயலவரைப் பாதிக்கும்


**38.** நுகர்வில் எதிர்கணிய வெளிவாரி விளைவு / நுகர்வில் வெளிவாரிச் செலவு

39. (iii) 40. (iv) 41. (ii) 42. (ii)

43. (i) 44. (iv) 45. (ii) 46. (iii)

47. (ii) 48. (iii)

49. (i)




இலாபத்தை உச்சப் படுத்தும் வெளியீட்டு மட்டம் = 3

(ii) சமூக ரீதியில் உத்தம வெளியீட்டு மட்டம் = 2

(iii) ஒவ்வோர் அலகு உற்பத்தி மீதும் 20 ரூபா வரி விதிக்கலாம்.

சட்டரீதியாக உற்பத்தியை 2அலகாகக் கட்டுப் படுத்தல்.

சட்டரீதியாக வெளியேற்றும் கழிவுகளைக் குறைக்கக் கூடிய கருவிகளை நிறுவனத்தை பொருத்தச் செய்து செலவை நிறுவனத்தைத் தாங்கச் செய்தல்.



# உசாத்துணை நூல்கள் Reference Books


1. Economics For Professional and Business Studies R.Powell (1994) P. 161 – 170
2. Mordern Economics
   J. Harvey (1993) P. 159 – 164, 198 – 220
3. An Introduction to Positive Economics
   Richard G Lipsey (1993) P. 399 – 420
4. Macmillan Dictionary of Modern Economics
   David W. Pearce (1995)
5. Work Out Economics A – Level
   R. Young and S Grant ( 1996 ) P 117 – 125
6. An Introduction to Modern Economics – Philip Hardwick, Bahadurkhan, John Langmead (1996) P. 208 – 245
7. First Principles of Economics – Richard G. Lipsy, colin Harbury (1994) P. 81 – 93
8. A Level Economics – Ray Powell ( 1993) P . 89 – 98
9. சந்தைப்பொருளாதாரம் என்றால் என்ன?
   மார்க்கா நிறுவன வெளியீடு (பக், 54 – 58)
10. கற்றல் கற்பித்தல் வழிகாட்டி க. பொ. த. உயர்தரம் பொருளியல் - பகுதி 1 (பக். 49 – 50)

கங்கை

கொம்பியூட்டர் பிறின்ட்

கங்கை றோணியோ

(பிறவுண் வீதிக்கு அருகாமையில்)

நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

[illegible]